# අධ්‍යාපන අමාත්‍යාංශය
# கல்வி அமைச்சு
# Ministry of Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112785818
info@moe.gov.lk www.moe.gov.lk


මගේ අංකය / எனது இல. / My Ref. } ED/01/09/14/02/17

ඔබේ අංකය / உமது இல. / Your Ref. }

දිනය / திகதி / Date } 2020.08. 07

**சுற்றுநிருப இலக்கம் : 06/2020 (I)**

மாகாண பிரதம செயலாளர்கள்,
மாகாண கல்விச் செயலாளர்கள்,
மாகாண கல்விப் பணிப்பாளர்கள்,
வலய கல்விப் பணிப்பாளர்கள்,
கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள்,
அதிபர்கள்.

**<u>ஐந்தாம் தர புலமைப் பரிசில் பெறுநர்களுக்குப் புலமைப் பரிசில் வழங்கல்.</u>**

ஐந்தாம் தர புலமைப்பரிசில் தாரர்களுக்குப் புலமைப்பரிசில் உதவுதொகை வழங்குதல் தொடர்பாக இதற்கு முன்னர் வெளியிடப்பட்ட 2020.01.17 ஆம் திகதியிடப்பட்ட 06/2020 சுற்றுநிருபத்தில் குறிப்பிட்டுள்ளவற்றில் உங்களது கவனத்தை வேண்டுகிறேன். அந்தச் சுற்றுநிருபத்திற்கு மேலதிகமாக இந்தச் சுற்றுநிருபமும் கீழே உள்ள திருத்தங்களுடன் இதன்பின் வலுவிலிருக்கும்.

01. சுற்றுநிருபத்தின் 4.2 வாசகம் பின்வருமாறு திருத்தப்படுகின்றது,

" ஐந்தாம் தர புலமைப்பரிசில் பெறுநர்களிடையே க.பொ.த (சாதாரண தர) பரீட்சையில் முதல் முறையே தகைமை பெற்று க.பொ.த (உயர்தரம்) கற்பதற்கு 12 ஆந்தரத்திற்கு சேர்க்கின்ற புலமைப்பரிசில் உரித்துடைய மாணவர்களுக்கும் 13 வருட தொடர்ச்சியான கல்வியினை கற்கின்ற மாணவர்களுக்கும் புலமைப் பரிசில் கொடுப்பனவு உச்ச அளவாக இரண்டு வருட கால எல்லைக்கு உரித்துடையதாகும்."

02. சுற்றுநிருபத்தின் 7.8.1 வாசகம் பின்வருமாறு திருத்தப்படுகின்றது,

"ஏதாவது நியாயமான காரணமொன்றின் அடிப்படையில் வங்கிக் கணக்கினை மூடுவதற்கு/ மாற்றுவதற்கு வங்கிக்கு புலமைப்பரிசில் பெறுநர் பாடசாலைக் காலத்தில் வருவதாயின் அதிபரினால் உரிய வங்கிக்கு அதுபற்றி தமது சிபாரிசினை (இணைப்பு 05) இன் பிரகாரம் வலயக் கல்விப் பணிப்பாளருக்கு பிரதியொன்றுடன் அறிவித்தல் வேண்டும்."

03. சுற்றுநிருபத்தின் 12 வது வாசகம் பின்வருமாறு திருத்தப்படுகின்றது,

"தமக்கு உரித்தான புலமைப்பரிசில் நிதியைப் பெற்றுக் கொள்ளாத மாணவ மாணவிகள் இருப்பின் அல்லது ஏதாவதொரு காரணத்தால் நிறுத்திவைக்கப்பட்ட புலமைப்பரிசில் நிதித் தொகை இருப்பின், அப்புலமைப்பரிசில் தொகையை பின்வரும் காரணங்களின் அடிப்படையில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் வெட்டுப் புள்ளியைத் தாண்டிய எனினும் புலமைப்பரிசில் உரித்துக் கிடைக்காதமாணவர்களுக்கு வழங்க முடியும். அதற்காக உறுதிப்படுத்தப்பட்ட ஆவணத்தை கவனத்திற் கொண்டு உரிய பாடசாலையின் அதிபர் மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளரின் சிபாரிசுடன் கல்வி அமைச்சின் பாடசாலை செயற்பாட்டுக் கிளையின் கல்விப் பணிப்பாளர் தலைமைக் கணக்காளர் (நிதி) மற்றும் தரம் 5 புலமைப்பரிசில் விடயத்திற்குரிய பிரதி/ உதவி பணிப்பாளர்கள் உள்ளடங்கிய குழுவின் அனுமதியுடன் வழங்க முடியும்."

04. இச் சுற்றுநிருபத்தின் திருத்தங்கள் தவிர ஏனைய அனைத்து அறிவுறுத்தல்களும் சுற்றுநிருப இல 02/2020 க்கு பொருந்தக்கூடியதாகும்.

என்.எச்.எம். சித்ரானந்த,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

பிரதிகள் :-

| | | |
|---|---|---|
| I. கணக்காய்வாளர் | - | தயவுடன் அறிதலுக்காக |
| II. செயலாளர், நிதி அமைச்சு | - | தயவுடன் அறிதலுக்காகவும், தேவையான நடவடிக்கைக்காகவும் |
| III. செயலாளர், அரச சேவைகள் அமைச்சு | - | தயவுடன் மாவட்டச் செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்களை அறிவுறுத்துவதற்காக |
| IV. பொது முகாமையாளர் - இலங்கை வங்கி | - | தயவுடன் சகல இலங்கை வங்கி கிளைகளுக்கும் அறிவிப்பதற்காக |
| V. பொது முகாமையாளர் - மக்கள் வங்கி | - | தயவுடன் சகல மக்கள் வங்கி கிளைகளுக்கும் அறிவிப்பதற்காக |
| VI. பிரதம நிதி உத்தியோகத்தர்,கல்வி அமைச்சு | - | தயவுடன் தேவையான நடவடிக்கைக்காக |
| VII. பிரதம கணக்காளர் (நிதி), கல்வி அமைச்சு | - | தயவுடன் தேவையான நடவடிக்கைக்காக |
| VIII. பிரதம உள்ளகக் கணக்காய்வு | - | தயவுடன் அறிதலுக்காக |
| IX. சகல வலய கணக்காளர்கள் | - | தயவுடன் தேவையான நடவடிக்கைக்காக |